UNITED NATIONS
SRI LANKA

# 3.4 மில்லியன் இலங்கை மக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதற்காக தனது அவசர மனிதநேய வேண்டுகோளை ஐ.நா. நீடித்துள்ளது

07 நவம்பர் 2022

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் (ஐ.நா) அணியும் அரச சார்பற்ற அமைப்புகளும் தமது மனிதநேயத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் (HNP) கூட்டுத் திட்டத்தை இன்று முதல் மறுசீரமைத்து விரிவுபடுத்தியுள்ளன. சுதந்திரத்திற்கு பிற்பட்ட மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்துக்கொண்டிருக்கும் இலங்கையில் 3.4 மில்லியன் மக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் கடன் பிரச்சினை மற்றும் உணவுக்கும் மருந்துகளுக்குமான தட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஐ.நா. ஆதரவிலான பல்துறை உதவித் திட்டம் கடந்த ஜூன் மாதம் முதல் செயற்பட்டு வருகின்றது. நாட்டிலுள்ள எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு பணம், உணவு, பாடசாலைப் பிள்ளைகளுக்கான உணவு, மருந்துகள், பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்பிலான மனிதநேய உதவிகளை அரசாங்கங்களும் நன்கொடை முகவர் நிறுவனங்களும் வழங்கியுள்ளன. ஏனைய ஐ.நா. முகவரகங்களின் வேண்டுகோள்களுடன் இணைந்து HNP திட்டம் ஏற்கனவே 79 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்காகத் திரட்டியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் USAID அமைப்பு, அவுஸ்திரேலியா, உள்ளடங்கலாக ஜப்பான், ஐ.நா. மத்திய அவசரகால நிவாரண நிதியம் (CERF), கனடா, டென்மார்க், நோர்வே, நியூசிலாந்து, இத்தாலி, ஐரோப்பிய ஒன்றியம், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ் என்பன வழங்கிய கணிசமான உதவிகளும் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, தாய்லாந்து, சுவீடின், ஜோர்ஜியா, Latter Day Saint தர்ம ஸ்தாபனம் மற்றும் பிரண்டிக்ஸ் அப்பரல்ஸ் லிமிட்டட், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., தராஸ் (அலிபபா குரூப்), அமானா வங்கி பி.எல்.சி., சிற்றி பவுண்டேஷன் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் தனிப்பட்டவர்களின் நன்கொடைகளும் இத் தொகையைத் திரட்டுவதற்குப் பங்களிப்புச் செய்தன. மறுசீரமைக்கப்பட்டு நீடிக்கப்பட்ட HNP திட்டத்தின் 2022ஆம் ஆண்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க மேலும் 70 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவினம் 149.7 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

**“HNP திட்டத்திற்குத் தாராளமான பங்களிப்பை வழங்கியதன் மூலம் இலங்கை மக்களுடனான ஒற்றுமையை வெளிப்படுத்திய சர்வதேச சமூகத்திற்கு நாம் மனமுவந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம். எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய மக்களை தற்போதய நெருக்கடியின் தாக்கங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமாயின் இந்த ஆதரவு**

**தொடர்ந்து பேணப்பட வேண்டும்"** என்று இலங்கையில் ஐ.நா. வதிவிட இணைப்பாளராகக் கடமையாற்றும் ஹனா சிங்கர்-ஹம்டி தெரிவித்தார்.

மனிதநேய சமூகத்தின் மேம்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இலங்கையின் 25 மாவட்டங்களிலும் HNP திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரின் போஷாக்கை மேம்படுத்துதல, பாதுகாப்பான குடிநீரை வழங்குதல், எளிதில் பாதிக்கப்படக்கூடிய விவசாய மற்றும் மீனவ குடும்பங்களைப் பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு நீடிக்கப்பட்ட HNP திட்டம் இடமளிக்கும். உள்நாட்டு உணவு உற்பத்தி மற்றும் விநியோகத்தை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐ.நா. வதிவிட இணைப்பாளர் சிங்கர்-ஹம்டி வலியுறுத்தினார்.

**"தற்சமயம், வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதே இலங்கையில் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான வழி"** என்று அவர் கூறினார்.

அடுத்தடுத்து இரண்டு பருவங்களில் அறுவடை வீழ்ச்சி, வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை, குடும்பங்களின் கொள்வனவுத் திறன் குறைவு என்பவற்றின் விளைவாக இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது. 2023ஆம் ஆண்டிலும் அறுவடை குறையுமென எதிர்பார்க்கப்படுவதாலும் 2022 ஒக்டோபர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 85.6 சதவீதம் என்பதாலும் அநேகமான இலங்கை மக்கள் கஷ்டப்படுகின்றனர். சனத்தொகையில்
28 சதவீதமானோர் - அதாவது, 6.3 மில்லியன் மக்கள் - மிதமான அல்லது மோசமான தீவிர உணவுத் தட்டுப்பாட்டிற்கு முகங்கொடுக்கின்றனர். உலக வங்கியின் 2022ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி அறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டிற்கும் 2022ஆம் ஆண்டிற்கும் இடையே நாட்டின் வறுமை வீதம் 13.1 சதவீதத்திலிருந்து 25.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகளினாலும் மனிதநேயப் பங்காளிகளினாலும் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அவசரகால செயற்பாடுகளை மறுசீரமைக்கபட்டு நீடிக்கப்பட்ட HNP திட்டம் முழுநிறைவாக்கும். எளிதில் பாதிக்கப்படக்கூடிய மறறும் உணவுப் பாதுகாப்பற்ற 2.4 மில்லியன் மக்களுக்கு உடனடி உணவு உதவியை வழங்குதல்; மோசமாகச் சீர்குலைந்துள்ள உணவு உற்பத்தி அமைப்புகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக 1.5 மில்லியன் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் உரவகைகள் உள்ளிட்ட உதவிகளை வழங்குதல் என்பன உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் உள்ளடங்கும்.

இந்த HNP திட்டத்தினால் விடுக்கப்படும் வேண்டுகோளின் மூலம் கர்ப்பிணிகள், மற்றும் பாடசாலைப் பிள்ளைகள் உள்ளிட்ட 2.1 மில்லியன் மக்களுக்கு போஷாக்கு உதவிகள், 900,000 மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர், 867,000 பேருக்கு மருந்துகள் மற்றும் பாலியல்-

UNITED NATIONS
SRI LANKA

இனப்பெருக்க ஆரோக்கியப் பராமரிப்பு உள்ளடங்கலான உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்க முயற்சிகள் எடுக்கப்படும். வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் சேவையைத் தொடர்வதற்கும் இத் திட்டம் இடமளிக்கும்.

**ஊடகத் தொடர்புகள்:**

**இலங்கையில்:**

ஜோசப் ஹின்க்ஸ், பொதுசன தகவல் அதிகாரி, ஐ.நா. வதிவிட இணைப்பாளரின் அலுவலகம் | joseph.hincks@un.org | +94717792517; தில்ஷானி டயஸ், தொடர்பாடல்கள், FAO இலங்கை | dilshani.dias@fao.org | +94 77 015 2424; பிஸ்மார்க் ஸ்வான்கின், தொடர்பாடல் பிரதானி, பரிந்துரை மற்றும் பங்காளித்துவங்கள், UNICEF | bswangin@unicef.org | +94 777 236 548; டானியா ஜான்ஸ், தொடர்பாடல்கள் அதிகாரி, WFP | tanya.jansz@wfp.org | +94769102462; மதுஷா திசாநாயக்க, உதவிப் பிரதிநிதி, ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA) | mdissanayake@unfpa.org | +94 112 580 840

**பாங்கொக்கில்:**

பியர் பெரோன், பிராந்திய பொதுசனத் தகவல் அதிகாரி, மனிதநேய அலுவல்களின் இணைப்புக்கான ஐ.நா. அலுவலகம் | peronp@un.org | +66 614-200-390; டேவிட் ஸ்வான்சன், ஐ.நா. பிராந்திய பொதுசனத் தொடர்பாடல்கள் அதிகாரி, உலகளாவிய தொடர்பாடல்கள் திணைக்களம் | swanson@un.org | +66 6 5982-5682